<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ., பி.எல்.,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண் :41/2022**

**நாள் : 01.03.2024** **வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அம்சவேணி | தொழில் | : |
| த/பெ | : | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**<u>முதல் விசாரணை –</u>**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன். 01.06.2020 – 1ம் பிரதிவாதியும், வாதிகளின் தகப்பனாரும் செய்து கொண்டதாக சொல்லும் கிரைய அக்ரிமெண்ட் சான்றிடப்பட்ட நகல் வா.சா.ஆ.1 , 14.09.2020 – 1ம் பிரதிவாதியின் மனைவி 1ம் வாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 , 20.12.2021 – 1ம் வாதி 1ம் பிரதிவாதியின் மனைவிக்கு கொடுத்த வழக்கறிஞர் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.3, 1ம் பிரதிவாதி வாதிகளின் தகப்பனார் மீது சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த OS.06/2021 வழக்கின் பிராது நகல் வா.சா.ஆ.4, 1ம் பிரதிவாதியின் மனைவி 1ம் வாதி மீது சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த OS.17/2021 வழக்கின் பிராது நகல் வா.சா.ஆ. 5, வாதிகளின் தகப்பனார் இறப்புச்சான்றிதழ் நகல் வா.சா.ஆ.6, வாதிகளின் தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் கணினி நகல் வா.சா.ஆ.7, 1ம் பிரதிவாதியின் மனைவி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.8, 1

ம் பிரதிவாதியின் மனைவி வழக்கறிஞர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை வா.சா.ஆ.9 , 27.12.2021 – 2ம் பிரதிவாதி வாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.10, 28.05.2020 – வாதியின் தகப்பானர் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் ஜெராக்ஸ் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படியும் சாட்சியின் ஒப்புதலின்படியும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

ஓம்/–திரு.V.ஜான்மினோ,
கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.